**செ.வெ.எண்: 591** **நாள்: 12.10.2021**

# ஊரக உள்ளாட்சி தற்செயல் தேர்தல்கள் 2021
## பத்திரிக்கைச் செய்தி

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் காலியாக உள்ள ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகத் தேர்தல் எதிர்வரும் 22.10.2021 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. அன்னவாசல் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்காக கடந்த 11.01.2020, 30.01.2020 மற்றும் 04.03.2020 ஆகிய தினங்களில் நடைபெற்ற மறைமுகத் தேர்தலுக்கான கூட்டத்திற்கு போதிய உறுப்பினர்கள் வருகை தராத காரணத்தினால் இத்தேர்தல் நடத்தப்படவில்லை. இதுபோல புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயம் ஊராட்சி ஒன்றியம், புலிவலம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அரசர்குளம் கீழ்பாதி, இராஜேந்திரபுரம், குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம், கிள்ளனூர், செனையக்குடி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கும்மங்குடி மற்றும் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வேங்கிடகுளம் ஆகிய கிராம ஊராட்சிகளிலும் காலியாக உள்ள கிராம ஊராட்சித் துணைத்தலைவர் பதவியிடங்களை நிரப்பிட எதிர்வரும் 22.10.2021 அன்று காலை 10.00 மணிக்கு தொடர்புடைய கிராம ஊராட்சி அலுவலகங்களில் மறைமுகத் தேர்தலுக்கான கூட்டங்கள் நடைபெறும். இந்த மறைமுகத் தேர்தல்களை நடத்திட தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அன்னவாசல் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகத் தேர்தலில் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியக்குழு வார்டு உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிக்க தகுதியுடையவர் ஆவார். இதுபோல கிராம ஊராட்சி துணைத்தலைவர் பதவியிடங்களுக்கு தொடர்புடைய கிராம ஊராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிக்க தகுதியுடையவர்கள் ஆவர் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.